**தவலம பிரதேச சபை - 2022**

**-----------------------------------------**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தவலம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தவலம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது சபையினால் கட்டிடங்கள் நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,876,954 இற்கான பெறுமதியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) புரநெகும செயற்திட்டத்தின் மூலம் ரூபா 15,725,494 தொகை செலவிடப்பட்டு சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த தவலம வாராந்த சந்தை நிர்மாண வேலையின் பெறுமதி காணி, கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) சபைக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களை கணக்கீடு செய்யும் போது டிரக்டர் வண்டியின் பெறுமதி ரூபா 10,000,000 தொகை மிகையாக மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஏற்பாடுகள் கிடைத்திருக்காத வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 1,043,753 தொகை பெறுமதியான 02 நிர்மாண வேலைகளுக்காக கடன்பட்டோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) 1994 இன் 04 இலக்க தென் மாகாண முத்திரைக் கட்டண திருப்ப நியதிச் சட்டத்திற்கு இணங்க 02 வருட காலப் பகுதிகளை மிகைத்துள்ள ரூபா 1,709,618 தொகைக்கான முத்திரைக் கட்டணம் பெற வேண்டிய நிலுவை முத்திரைக் கட்டணம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,146,465 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட திறண்தொழில் மற்றும் கைத்தொழில் வரி வருமானம் ரூபா 195,320 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஒன்றிற்கு சமமாக இருக்க வேண்டிய சொத்துக்கள் கணக்கு மீதி மற்றும் மூலதன செலவீட்டுக்கான அரசிறை உதவு தொகைக் கணக்கு மீதியிடையே ரூபா 777,246 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | - மேற்படி - | குறிப்பிட்ட கணக்கு மீதிகள் ஒன்றிற்கு ஒன்று சமமாக இருக்க வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 896,198 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவுகள் 134(1) | சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் முன்னேற்றமான பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் வருடத்திற்கு ஒருமுறை பரிசோதனை மேற்கொண்டு ஆவணப்படுத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் காணி கட்டிட கணிப்பீடொன்று நடாத்தப்படும் என. | விதிக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4,258,332 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 1,720,910 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 613,199 | 463,328 | 680,492 | 301,668 | 528,679 | 845,394 | 914,602 | 518,832 |
| வாடகை | 2,465,000 | 1,572,140 | 1,563,333 | 252,157 | 3,167,000 | 228,910 | 23,560 | 243,350 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 489,080 | 260,156 | 260,156 | 8,800 | 365,500 | 203,312 | 203,312 | 8,800 |
| ஏனைய வரு மானங்கள் | 16,351,864 | 12,304,353 | 12,304,353 | 6,000 | 1,482,000 | 6,840,570 | 6,840,570 | 6,000 |
| மொத்தம் | 19,919,143 | 14,599,977 | 14,808,334 | 568,625 | 5,543,179 | 8,118,186 | 7,982,044 | 776,982 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 776,982 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அது ரூபா 568,625 தொகையாக இருந்தது. | எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | சபைக்குக் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,146,466 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,709,618 தொகை கிடைக்க வேண்டியிருந்தது. | ஏதும் இல்லை என பிரதான செயலாளர் அறிவித்திருந்தார் என. | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் 2014 மற்றும் 2017 ஆண்டுகள் முதல் திருத்த வேலை மேற்கொள்ளப்படாமல் சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த வாகனங்களின் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது பொது நிதிச் சுற்றறிக்கை 02/2015 படி அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபை நிதியத்தில் போதியளவு பணம் காணப்படாமையால் திருத்த வேலை மேற்கொள்ள முடியாமல் போனது என. | திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் கப் வண்டி 2022 மே 09 திகதி கடமை அலுவல்கள் அல்லாத விடயம் ஒன்றிற்காக கொழும்பிற்கு சென்றுவிட்டு வரும் வழியில் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டு அழிவடைந்திருந்தது. மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அதற்கான காப்புறுதி நட்டஈடு கிடைத்திருக்காததுடன், நி.பி. 104 விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திணைக்கள மட்டத்தில் விசாரணைகள் மேற்கொள்ளும் படி அறிவிக்கப்பட்டுள்ளது என. | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ள வேண்டும். |

**3.2 செயற்திட்டங்கள், செய்பணிகள் மற்றும் மூலதன வேலை தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 925,000 தொகை பெறுமதியான சூரியசக்தி மின்பிறப்பாக்கி முறைமை ஒன்று தவலம தகனசாலையில் 2022 ஆண்டில் பொருத்தப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின் அலகுகளுக்காக சபைக்கு கிடைக்க வேண்டிய தொகை கிடைத்திருக்கவில்லை. | பெற வேண்டிய தொகை தொடர்பாக மின்சார சபைக்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்டதென. | பெற வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |